DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Tmt.M.Praveena, M.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 12/2022**

**CNR.No: TNTH06-000029 -2022 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வம் | Town | புலிகுத்தி கிராமம் |
| Father Name | : லேட்.வீரகவுண்டர் | Taluk | : உத்தமபாளையம் |
| Age | : 64 | **DW1** | |

---

நாள் : 16.06.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. இவ்வழக்கில் வாதியானவர் என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார், என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தந்தை பெயர் வீரகவுண்டர் என்றால் சரிதான். மேற்படி வீரகவுண்டருக்கு நான், தங்கராம், சஞ்சீவி, முத்துலட்சுமி, சுப்பையன் ஆகியோர்கள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். வீரகவுண்டர் அவரது மனைவி லட்சுமி ஆகியோர்கள் இறந்த பின்னிட்டு தான் நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் தவறாகும், அவர்களது இறப்பிற்கு முன்னரே பாகம் பிரித்துக்கொண்டோம்.

2) நான், வாதிகள், 2,3 பிரதிவாதிகள் 13.12.2019 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். 13.12.2019 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தைத்தவிர வேறு ஏதேனும் பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் இல்லை. 13.12.2019 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்திற்கான மூலப்பத்திரம் எதுவும் நான் தாக்கல் செய்தேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 13.12.2019 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பட்டாவின் அடிப்படையில் தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

3) 13.12.2019 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றால் சரிதான். புலிகுத்தி கிராம சர்வே எண் 44/2 பி–ல் பட்டா எண். 475 ல் கண்ட சொத்தானது வாதிகளுக்கும், எனக்கும், 2,3 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4–ஆன 13.12.2019 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் புலிகுத்தி கிராம சர்வே எண். 44/2 பி–ல் பட்டா எண். 475 ல் வாதிகளுக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் கூட்டு பட்டாக உள்ளது என்றால் பக்கம் எண்.39 ல் குறிப்பாக கண்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை என சாட்சி கூறுகிறார்.

4) நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை யார் வழக்கறிஞர் கூறினார் என்றால் நான் தான் கூறினேன். நான் எனக்காக மட்டும் சாட்சியம் அளிக்கிறேனா அல்லது மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால் நான் எனக்காக மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் எதிர்வழக்குரையை அனைத்து நபர்களுக்காகவும் சேர்ந்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சியானது ஒத்தி வைக்கப்படுகிறது. )**

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.06.16 17:46:08 +0300

District Munsif ,
Uthamapalayam.